

# கோலாலம்பூர், கம்போங் அத்தாப்பில் சாலை நடுவே திடீர் குழிகள்

கோலாலம்பூர், ஆக. 30-

கோலாலம்பூரின் கம்போங் அத்தாப்பில் சாலையொன்றில் குழிகள் ஏற்பட்டிருப்பதைக் காட்டும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

கம்போங் அத்தாப், ஜாலான் சூ செங் கேய் சாலையில் அக்குழிகள் காணப்படுகின்றன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 13

## கோலாலம்பூர், கம்போங் அத்தாப்பில்

குழிகள் விழுந்துள்ள இடத்தில் சாலைப் போக்குவரத்துப் போலீசார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கோலாலம்பூர் மாநகர் மன்ற ஊழியர்கள் அங்குள்ள சாலைச் சந்திப்பில் கூம்புகள் வைத்திருக்கும் காட்சியும் அப்படங்களில் காணப்படுகின்றன.

அச்சாலையில் குழிகள் விழுந்திருப்பதைக் கோலாலம்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டு மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்பு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆனால், அது குறித்து எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்று அறிக்கையொன்றின்வழி அது குறிப்பிட்டது.

கம்போங் அத்தாப், ஜாலான் டேவான் பகாசா அருகே அச்சம்பவம் நிகழ்ந்திருப்பதை கோலாலம்பூர் மாநகர் மன்றம் உறுதிப்படுத்தியது. பாதிக்கப்பட்டுள்ள சாலைப் பகுதியைச் செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அது கூறியது.

அண்மையில் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் இரண்டு நில அமிழ்வு சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில், இப்புதிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த முதல் சம்பவத்தில் இந்திய நாட்டுச் சுற்றுப்பயணியான ஜி.விஜயலட்சுமி (வயது 48) என்பவர் நிலஅமிழ்வினால் ஏற்பட்ட குழியில் விழுந்தார். அவர் என்ன ஆனார் என்பது இதுவரை தெரியவில்லை. அங்கிருந்து சுமார் ஐம்பது மீட்டர் தொலைவில் புதன்கிழமை அதிகாலையில் இரண்டாவது நிலஅமிழ்வு சம்பவம் நிகழ்ந்தது.